NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2024

TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 100 marks

PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your interest to write legibly and to present your work neatly.

IEB Copyright © 2024

SECTION A

QUESTION 1

பகுதி ஒன்று

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக :

இறந்தொழிந்த மாணவர்கள்

ஒரு நாள் பல மாணவர்கள் நீர் விளையாடுவதற்கு எண்ணினார்கள். ஒரு பெரிய குளத்துக்குச் சென்றார்கள். பலவாறு நீந்தி விளையாடினார்கள். ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்கு நீந்திச் செல்வ தென்று அந்த மாணவர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு நீந்திச் சென்றார்கள்.

அந்தக் குளத்தின் அகல நீளம் ஏறக்குறைய ஒரு பர்லாங்கு இருக்கும். மாணவர்கள் ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்குப் போய்விட்டு வருவதற்குள் கால்கைகள் ஓயந்து போயின. நடுக் குளத்தில் வரும்போது ஒரு மாணவனுக்குக் கைகால்களை அசைக்க முடியவில்லை. அவனுக்கு அகவை பதினான்கு. அவன் தான் தளர்ந்துபோய் இக்கட்டில் மாட்டிக்கொண்டதைக் குறிப்பாலும், கூச்சலாலும், நீரில் அமிழ்ந்து மேலெழுவதாலும் புலப்படுத்தினான்.

கரையில் நின்ற ஒரு மாணவன் நீரில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் மாணவனுடைய நிலைமையை உணர்ந்தான் விரைந்து நீரில் பாய்ந்து நீந்திச் சென்றான். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த மாணவன், உதவிக்குச் சென்ற மாணவனைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக் கொண்டான் .உதவிக்குச் சென்ற மாணவனால் நீந்த முடியவில்லை. அவனுந் தொல்லைக்குள் சிக்கிக்கொண்டு தண்ணீரில் மூழ்கத் தொடங்கினான். இரண்டு பேரும் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு, மூன்றாம் மாணவன் ஒருவன் விரைந்து உதவிக்குச் சென்றான். நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு மாணவர்களும் மூன்றாம் மாணவனைக் கட்டிப்பிடித்தார்கள். மறுகணம் மூன்று மாணவர்களும் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டனர்.

கரையில் நின்ற சிலர் இந்தச் செய்தியைப் பலருக்குந் தெரியப்படுத்தினர். குளத்தின் கரையில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. நீரில் அகப்பட்டுக் கொண்ட மாணவர்களோ கால்மணி வரையில் தத்தளித்து இறந்துபோனார்கள். அவர்கள் மூவரும் ஒரு வரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தபடியால், பிணங்கள் மேலே மிதிக்காமல் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டன. பிறகு செம்படவர்களைக் கொண்டு வந்து வலைபோட்டு மாணவர்களுடைய உயிர் நீங்கிய உடல்களை வெளியே எடுத்தார்கள்.

அன்று முதல் மற்றைய மாணவர்கள், "ஔவைப் பிராட்டியார் நீர் விளையாடேல்" என்று கூறியுள்ளதை ஒரு பொருட்படுத்தாதபடியால் மூவர் இறந்து போனார்கள். நாம் ஔவையார் மொழிக்கு மதிப்புக் கொடுத்து அம்மொழியைப் பொன்போலப் போற்ற வேண்டும்.

(ஆத்திசூடி விளக்கக் கதைகள்

ஆசிரியர் திரு க.இனியன்)

IEB Copyright © 2024

1.1 காலி இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.

1.1.1 ஒரு பெரிய குளத்துக்குச் _____ . (1)

1.1.2 அந்தக் _____ அகல நீளம் ஏறக்குறைய ஒரு பர்லாங்கு இருக்கும். (1)

1.1.3 உதவிக்குச் சென்ற மாணவனால் _____ முடியவில்லை. (1)

1.1.4 மறுகணம் முன்று _____ தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டனர். (1)

1.1.5 குளத்தின் கரையில் பெரிய _____ கூடிவிட்டது. (1)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக.

1.2.1 ஒரு நாள் யார் நீர் விளையாடுவதற்கு எண்ணினார்கள்? (2)

1.2.2 எதனால் அந்த மாணவர்கள் சென்றார்கள்? (2)

1.2.3 ஒரு மாணவனுக்கு என்ன நடந்தது? (2)

1.2.4 இரண்டு மாணவர்களும் யாரை கட்டிப்பிடித்தார்கள்? (2)

1.2.5 மாணவர்கள் எத்தனை மணி தத்தளித்து இறந்து போனார்கள்? (2)

1.3 எது **சரி** (TRUE) எது **தவறு** (FALSE) எனக் கூறுக.

1.3.1 ஒரு பெரிய குளத்துக்குச் சென்றார்கள். (1)

1.3.2 அந்தக் குளத்தின் அகல சிறிய ஏறக்குறைய பர்லாங்கு இருக்கும். (1)

1.3.3 உதவிக்குச் சென்ற மாணவனை கெட்டியாகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். (1)

1.3.4 கரையில் நின்ற பலர் இந்தச் செய்தியைப் பலருக்குந் தெரியப்படுத்தினர். (1)

1.4 எதிர்ச்சொல் எழுதுக. எ.கா: அன்று - இன்று.

1.4.1 சிலர் (1)

1.4.2 இந்த (1)

1.4.3 வேகமாக (1)

1.4.4 மேடு (1)

IEB Copyright © 2024

1.5 ஒருமைக்குப் பன்மை எழுதுக எ.கா: வண்டு – வண்டுகள்.

1.5.1 மாணவன் (1)

1.5.2 பெரியோர் (1)

1.5.3 குளம் (1)

1.5.4 புல்வெளி (1)

1.5.5 படை (1)

1.6 சரியாக எழுதுக. எ.கா: மரம் – மரத்தில்.

1.6.1 அவன் குளம் நீந்தினான். (1)

1.6.2 மூன்று மாணவர்களும் தண்ணீர் அமிழ்ந்து விட்டனர். (1)

1.7 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

நான் சிறுவனாக இருந்த போது என் கிராமத்து நண்பர்களுடன் விளையாடியும் சண்டையிட்டும் என் காலத்தை மிகப் பரந்த புல்வெளியில் கழித்தேன். எனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது நான் எங்கள் ஆடுகளை மேயச்சலுக்குக் கொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அவற்றை ஓட்டிச் செல்வது எனக்கு மிகவும் பிடித்தமான வேலையாக இருந்தது. அவை எங்களது வாழ்வாதாரமாகவும் மகிழ்ச்சிக்கு அடிப்படையாக இருப்பதற்காகவும் கடவுள் எங்களுக்குக் கொடுத்ததாக நான் கருதினேன். அதனால் தானோ எனக்கு அவற்றின் மீது மிகுந்த அன்பு ஏற்பட்டது. ஆடுகளை நான் புல்வெளியில் மேய்ச்சலுக்கு கொண்டுவிட்ட பிறகு என் நண்பர்களுடன் சேர்ந்து 'கவண்' (உண்டிவில்) அடித்து விளையாடுவேன். மேலும் தேனைச் சேமிக்கவும் கிழங்குகளை அகழ்ந்து எடுக்கவும் நான் கற்றுக்கொண்டேன். மேலும், நான் மாடுகளின் காம்புகளில் இருந்து நேரடியாகப் பாலை கறந்து குடிக்கவும் பழகினேன்.

(பேராசிரியர் முனைவர் மு.பொன்னவைக்கோ தமிழ்ப்பாடநூல் – நிலை 4)

1.7.1 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு (4)

பெயர்ச்சொற்களைப் பொறுக்கி எடுத்து எழுதுக. (4)

1.7.2 இரண்டு (2) திணைகள் (class) எழுதுக. (2)

1.7.3 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்களைப்

பொறுக்கி எடுத்து எழுதுக. (2)

1.7.4 இரண்டு (2) சுட்டு (demonstrative) எழுத்துக்களை எழுதுக. (2)

1.7.5 இரண்டு (2) வினா எழுத்துக்களை (questioning letters) எழுதுக. (2)

1.7.6 இரண்டு (2) பால் (gender) வகைகளை எழுதுக. (2)

IEB Copyright © 2024

1.8 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக. எ.கா: மகன் – மகள்.

1.8.1 வேலைக்காரன் (1)

1.8.2 அழகன் (1)

1.8.3 தோழன் (1)

1.8.4 நடிகன் (1)

1.9 சேர்த்து எழுதுக. எ.கா: அந்த + பெண் = அந்தப்பெண்

1.9.1 அந்த + பென்சில் (1)

1.9.2 காட்டு + புறா (1)

1.9.3 ஓட்டி + செல்வது (1)

1.9.4 ஒருவன் + இடம் (1)

1.10 தமிழில் மொழிபெயர்த்து எழுதுக. எ.கா: HE - அவன்

1.10.1 GOATS (1)

1.10.2 FRIENDS (1)

1.11 பிரித்து எழுதுக. எ.க: அந்தப்பூ = அந்த + பூ

1.11.1 கடைக்காரன் (1)

1.11.2 அம்மாவுக்குத்தந்தேன் (1)

1.11.3 உன்னைப்பார்த்தான் (1)

1.11.4 அவளிடம் (1)

1.12 சரியான வினைச்சொல்லைத் தேர்ந்தெடு. Choose the correct verb.

1.12.1 அவன் சந்தைக்குப் (போனார், போனான்). (1)

1.12.2 அவள் செய்திகளை (படித்தாள், படித்தார்). (1)

60 marks

IEB Copyright © 2024

SECTION B

QUESTION 2

பகுதி இரண்டு

2.1 தமிழ் நீதி நெறிகள் **(TAMIL ETHICS)**

அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொற்களைப் பொறுக்கி எடுத்து கீழ்வரும் நீதி நெறிகளை முடிவு செய்க:

2.1.1 _____ முன்னறி தெய்வம். (2)

2.1.2 ஏவா மக்கள் _____ . (2)

2.1.3 _____ இருக்க வேண்டாம். (2)

2.1.4 மாதாவை ஒருநாளும் _____ . (2)

(ஓதாமல் ஒரு நாளும், அன்னையும் பிதாவும், மறக்க வேண்டாம், முவா மருந்து)

2.2 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்

கொடுக்கப்பட்ட கொன்றை வேந்தன் வறியைப் பற்றி ஒரு சிறு கதையை (Short story) (4–5 lines) எழுதுக.

(a) ''ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்''

அல்லது OR

(b) ''சையென திரியேல் '' (5)

2.3 கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

2.3.1 எந்த தமிழ்ப் புலவர் முதல் நீதி நெறிகளை எழுதினார்? (1)

2.3.2 அவர் பல நீதி நூல்களை எழுதியுள்ளார். ஒரு (1) நூலின் பெயர் எழுதுக. (1)

2.4 வாழ்க்கை வரலாறு.

ஔவையாரை அல்லது (OR) திருவள்ளுவரைப் பற்றி சுமார் (4 – 5) வரிகள் எழுதுக. (5)

IEB Copyright © 2024

2.5 திருக்குறள் **(THIRUKKURAL)**

2.5.1 கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

(a) திருக்குறளை யார் எழுதினார்? (1)

(b) திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன? (1)

(c) திருக்குறளின் இரண்டு (2) பகுதிகளை எழுதுக. (2)

2.5.2 அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொற்களைப் பொறுக்கி எடுத்துக் கீழ்வரும் குறள்களை நிறைவு செய்க.

(a) அகர முதல எழுத்தெல்லாம் _____ . (1)

(b) தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் _____ . (1)

(c) _____ நிற்க அதற்குத் தக. (1)

(d) _____ இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. (1)

(கல்லால் மணக்கவலை மாற்றல் அறிது ,கற்க கசடறக் கற்பவை கற்றப்பின், ஆதி பகவன் முதற்றே உலகு, அன்பும் அறனும் உடைத்தாயின்)

[28]

IEB Copyright © 2024

QUESTION 3 பகுதி மூன்று

POEM: கவிதை : பாப்பாட்டு

இப்பகுதியைப் படித்துக் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:

பாலைப் பொழிந்து தரும் பாப்பா
அந்தப் பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான்
அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்ல குதிரை
நெல்லு வயிலில் உழுவரும் மாடு
ஆண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு
இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு
என்று வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா
பொய் சொல்லக் கூடாது பாப்பா
என்றும் புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா
ஒரு தீங்கு வரமாட்டாது பாப்பா

கேள்விகளுக்கு விடை எழுதுக:

3.1 எந்த தமிழ் புலவர் இந்தக் கவிதை எழுதினார்? (1)

3.2 எந்த விலங்கு தன் வாலைக் குழைத்துவரும்? (1)

3.3 இரண்டு (2) பெரிய விலங்குகளின் பெயர்களை எழுதுக. (2)

3.4 பாப்பா எதை ஆதரிக்க வேண்டும் ? (2)

3.5 பாப்பா என்னென்ன வழக்க படுத்திக்கொள்ள வேண்டும் ? (2)

3.6 நமக்குத் தீங்கு ஏன் வரமாட்டாது ? (2)

3.7 இரண்டு (2) சிறிய பறவைகளின் பெயர்களை எழுதுக. (2)
[12]

40 marks

Total: 100 marks

IEB Copyright © 2024